www.padippakam.com

# 1983-ம் ஆண்டு யூலை மாத இனப் படு கொலையில் உயிரிழந்த தமிழ் பேசும் மக்களின் முதலாவது ஆண்டு நினைவாஞ்சலி

வெளியீடு 2

அனைத்து அடக்குமுறைகளையும் உடைத்தெறிவோம்!

படிப்பகம்

www.padippakam.com



## 1983-ம் ஆண்டு யூலை மாத இனப் படுகொலையில் உயிரிழந்த தமிழ் பேசும் மக்களின் முதலாவது ஆண்டு நினைவாஞ்சலி

—Y—

கடந்த ஆண்டு யூலை மாத இனக்கலவரத்தில் படுகொலை செய்யப்பட்ட தமிழ்பேசும் மக்களிற்கும், வெலிக்கடைச் சிறையில் திட்டமிடப்பட்டு படுகொலை செய்யப்பட்ட 53 விடுதலைப் போராளிகளிற்கும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் ஓராண்டு நினைவாஞ்சலியைச் செலுத்துகிறது. கடந்த ஆண்டு, எமது விடுதலைப் போராட்டத்தை நசுக்கவே, சிங்கள இனவாதிகளினாலும், அவர்களின் முதலாளித்துவ ஆட்சியாளர்களாலும், அவர்களின் கையாட்களான ஆயுதப் படையினராலும், சமூக விரோதிகளினாலும் இவ்வினப் படுகொலை மேற்கொள்ளப்பட்டது என்பதை அகில உலகமே அறியும். எமது அப்பாவி மக்களை அழிப்பதன்மூலம் எமது விடுதலைப் போராட்டத்தை அடக்கி விடலாம் என்று எண்ணிய சிங்கள இனவாத அரசு இன்று தோல்வியையே தழுவி நிற்கிறது. சிங்கள இனவாத முதலாளித்துவ அரசின் கெடுபிடிகளினால் கிளர்ந்தெழுந்த தமிழீழ மக்கள், இன்று எமது தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்துடன் இணைந்து, மக்களோடு ஒன்றித்த ஒரு போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லுகின்றனர். இன்று தமிழீழப் பிராந்தியங்களிலே பரந்துபட்ட மக்கள் அமைப்பாகப் பரிணமிக்கும் எமது கழகம் மக்களோடு ஒன்றித்த பெரியளவிலான ஆயுதப் போராட்டத்திற்குத் தயாராகி வருகிறது. மாறாக, ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் சிங்கள இனவாத அரசு, எம்மைப் பற்றியும், எமது விடுதலைப் போராட்டத்தைப் பற்றியும், உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பொய்ப் பிரசாரங்களில் ஈடு

படிப்பகம்

www.padippakam.com



படுவதோடு தொடர்ந்தும் இன ஒழிப்பு நடவடிக்கைகளையே மேற்கொண்டு வருகிறது. மேலும் தமிழீழ மக்களிற்கும் சிங்கள சிறிலங்காவின் பிராந்தியங்களில் தங்கிவாழும் தமிழ் பேசும் மக்களிற்கும், எதிரான இத்தகைய இன ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் சிறிலங்கா அரசு, தம்மை பலப்படுத்தும் விதத்தில் இன ஒழிப்பு, சுரண்டல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் இராஜாங்க உறவுகளைப் பலப்படுத்துவது மட்டுமல்லாமல் வியட்நாம், கம்பூச்சியா, தென் அமெரிக்க நாடுகளுடன் நேரிடையாகவும் ஏனைய சர்வதேச நாடுகளுடன் மறைமுகமாகவும், இன ஒழிப்பு, சுரண்டல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் இராஜாங்க உறவுகளை பலப்படுத்துவது மட்டுமல்லாமல் பாலஸ்தீனர்களையும். அரபு நாட்டு மக்களையும் படுமோசமான இன அழிவிற்கு உள்ளாக்கி வரும் இஸ்ரேலுடனும் சிறிலங்கா அரசு இராணுவ உறவுகளைப் புதுப்பித்துக் கொண்டிருப்பது எமது தமிழீழ மக்கள் மீது நடத்தவிருக்கும் பெரியளவிலான இன அழிப்பு நடவடிக்கைகளிற்கு முதற்படியான ஆயத்தங்களே என்று தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் முன்னெச்சரிக்கிறது.

நவீன ஆயுதத் தளபாடங்களை வரவழைத்து, எமது விடுதலைப் போராளிகளை அழிக்கும் போர்வையில், அப்பாவி மக்களைக் கொன்று குவிக்க பிரித்தானியாவில் ஒய்வு பெற்ற எஸ். ஏ. எஸ். கூலிப்படையினரையும், சிறிலங்கா அரசு உதவிக்கு அழைத்துள்ளது. அமெரிக்க உளவுப் படையான சி. ஐ. ஏ. இஸ்ரேலிய சியோனிஸ்டுகளின் உளவுப் படையான மொசாட் ஆகியவற்றின் ஆலோசனையுடன் பல்வேறு தந்திரங்களையும், சிறிலங்கா அரசு எமக்கெதிராக கைக்கொண்டு வருகிறது.

அண்மையில் சிறிலங்கா ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்தன இரண்டாவது சபை என்னும் பிரேரணையை முன்வைத்

படிப்பகம்

www.padippakam.com



துள்ளார். அடிப்படையில் இவர் குறிப்பிட்டுள்ள இரண்டாவது சபை, முன்பு நடைமுறையில் சாத்தியமற்றதென தமிழ் மக்களால் புறக்கணிக்கப்பட்ட மாவட்ட சபையை போன்ற கண்துடைப்பே. இப்படிப்பட்ட சபைகளினுல் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முடியாது. தமிழீழத்தை தவிர்ந்த எந்த ஒரு தீர்வும் தமிழ் பேசும் மக்களின் நிரந்தர தீர்வாகாது. இச் சூழ் நிலையில் 1983ம் ஆண்டு யூலை மாத இனப்படு கொலையில் உயிரிழந்த தமிழ்பேசும் மக்களை நினைவுகூறும் இத்தருணத்தில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் பின்வரும் கருத்துக்களைப் பொது மக்கள் முன்வைக்கிறது.

(1) தமிழீழ விடுதலைப் போராளிகளாகிய நாம் கடமையுணர்வோடும், பொறுப்புணர்வோடும் செயல்பட வேண்டும். எமக்கிடையே இருக்கும் சிறு வேற்றுமைகளை மறந்து எமது சக்திகளை வீணடிக்கா வண்ணம் நாம் ஒரு பொது வேலைத் திட்டத்தின் கீழ் இணைந்து செய்ல்பட வேண்டும். வெலிக்கடைச் சிறைச் சாலையில் மடிந்த எமது தோழர்கள் நினைவாக நாம் இந்த உறுதி மொழியை எடுப்போம்.

(2) தமிழீழ மக்கள் அனைவரும் சிறிலங்கா அரசின் பொய்ப் பிரச்சாரங்களை நம்பாது குறிப்பாக சிறிலங்கா வானொலி லலித் அத்துலத் முதலியின் பேச்சுக்களை நம்பாது அரசியலில் விழிப்புணர்வுடன், நாம் அமைக்கப்போகும் சோசலிசத் தமிழீழத்திற்காகப் போராட வேண்டும். சிறிலங்கா அரசினுல் மேற் கொள்ளப்படும் இன ஒழிப்பு நடவடிக்கைகளைத் தடுத்துப் போராடத் தற்பாதுகாப்பு அமைப்புகளை உருவாக்க வேண்டும். தமிழீழ விடுதலைப் போராட்டத்தை இத்தகைய பல்வேறு சோதனைகள், வேதனைகள் மத்தியில் நாம் முன்னெடுத்துச் செல்கிறோம். எனவே தளராத மன உறுதியுடனும், நம்பிக்கையுடனும் 1983-ஆம் ஆண்டு யூலையில் கொலை செய்யப்பட்ட வீரர்களை நினைவுகூறும் இவ்வேளையில்

படிப்பகம்

www.padippakam.com



எச்சோதனை வந்தாலும், எமது தாயக விடுதலையை வென்றெடுப்போம் எனத் திடச் சங்கற்பம் பூணுவோம்.

(3) தவிர்க்க முடியாத நிலையில் சிங்களப் பிராந்தியங்களில் சிதறி வாழும் தமிழ் பேசும் மக்கள், அவ்வாறு சிதறி வாழாது ஒன்று சேர்ந்த குழுக்களாகக் குழுமிவாழ எத்தனிக்கு மாறு, தற்காப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படியும் கேட்டுக்கொள்கிறோம். அத்தகைய நடவடிக்கைகளிற்குத் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் போதுமான ஆலோசனைகளும், அறிவுரைகளையும் வழங்குவதோடு தேவையான ஆயுதங்களையும் வழங்கும் என உறுதி அளிக்கிறோம்.

(4) எமது சிங்கள சகோதர சகோதரிகள் எமது தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தை ஆதரிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறோம். எமது உரிமைக்கான போராட்டம் நியாயமானது என்பதைத் தாங்கள் அறிவீர்கள். சுய நிர்ணய உரிமையும், பிரிந்து செல்லும் உரிமையும் எமது தமிழீழத் தேசிய இனத்தின் அடிப்படை உரிமைகள், தற்போதைய முதலாளித்துவ சிறிலங்கா அரசு தமிழீழ மக்களை அடக்கி ஒடுக்கிவிடப் பார்க்கிறது. அதனால் ஆளும் வர்க்கம் சிங்கள மக்களிடையே இன ஒழிப்பு உணர்வை ஊட்டி வருகிறது. எனவே தமிழ் பேசும் மக்களின் உணர்வுகளையும், உரிமைகளையும் நீதியாகவும், மனிதாபிமானமாகவும் அணுகும்படி சிங்கள மக்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

எமது தாய் நாடாகிய தமிழீழத்தின் விடுதலைக்காகவே நாம் போராடி வருகிறோம். தமிழீழத் தாயக விடுதலைப் போராட்டம் எவ்விதத்திலும் சிங்கள மக்களின் உரிமைகளைப் பாதிக்கப் போவதில்லை எனவும் நாம் உறுதியளிக்கிறோம். எமது தமிழீழ எல்லைகளை விஸ்தரிக்கும் எண்ணமோ அல்லது சிங்கள மக்களை ஆக்கிரமித்து அடக்கி ஒடுக்குகின்ற எண்ணமோ எமக்குக் கிடையாது. நாங்கள் பிரிவினைவாதிகள் அல்லர். நாம் எமது தமிழீழத் தேசிய

படிப்பகம்

www.padippakam.com


விடுதலைக்காகவே பாடுபடும் விடுதலைப் போராளிகள். நாங்கள் பயங்கரவாதிகள் அல்லர். தற்போதைய உரிமைகளை வென்றெடுக்கப் போராடும் புரட்சிவாதிகள். முதலாளித்துவ அரச பயங்கரவாதத்தில் சிங்கள மக்களாகிய நீங்களும் ஒடுக்கப்படுகிறீர்கள், அடக்கப்படுகிறீர்கள் என்பதை நாம் அறிவோம். நீங்கள் உங்கள் மக்களின் சமுதாயப் பொருளாதார விடுதலைக்காகப் போராடி ஒரு வர்க்க பேதமற்ற ஒரு சோசலிச சிறிலங்கா அரசை நிறுவிடும்போது, நாமும், நீங்களும் அதாவது தமிழீழ சோசலிச அரசும், சோசலிச சிறிலங்கா அரசும் நேசநாடுகளாக இப்பிராந்தியத்தில் அமைதியை நிலைநாட்டச் செய்ய முடியும். மாறாக ஜெயவர்த்தன அரசு, இஸ்ரேலியர்களுக்கு ஸ்ரீலங்காவின் இறைமையைத் தாரை வார்த்ததில் இருந்து இன்னுமொரு லெபனான் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் உருவாக்கி வருகிறார்கள், என்பதைத் தாங்கள் அறிந்து விழிப்புடன் செயல்படல் வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறோம்.

(5) சிறிலங்கா அரசில் பணிபுரியும் ஆயுதப் படையினருக்கும் நாம் நேசக் கரம் நீட்டுகிறோம். நாம் உங்களுக்கு எதிரானவர்களோ அல்லது பழிவாங்கும் நோக்கம் உடையவர்களோ அல்லர். உங்களிடையேயுள்ள இனவாதச் சக்திகள் எமது தோழர்களையும் அப்பாவி மக்களையும் அழித்துத் துன்புறுத்தி வருபவர்களாயிருந்தும்கூட நாம் உங்களை வஞ்சம் தீர்க்க எண்ணவில்லை. தனது வர்க்க நலனைப் பாதுகாப்பதற்காகவே ஜயவர்தனவின் அரசு நடுத்தர, சாதாரண குடும்பங்களைச் சேர்ந்த உங்களைத் தமிழ் மக்களுக்கு எதிராக ஏவி வருகிறது என்பதை நீங்கள் உணர வேண்டும். நீங்கள் இனியும் ஆளும் வர்க்கத்தின் கைப் பொம்மை ஆகிவிடாதீர்கள் என்று கேட்டுக்கொள்கிறோம். லலித் அதுலத் முதலி போன்றோரின் இனவாதப் பொய்ப் பிரச்சாரத்திற்கு செவி சாய்க்காமல், அவர்களின் முதலாளித்துவ அரசை மாற்றியமைத்து உங்களது சிங்கள மக்களுக்கான சமுதாயப் பொருளாதாரப் புரட்சியை மேற்கொள்ளும் ஒரு சோசலிச

படிப்பகம்

www.padippakam.com

சிறிலங்கா அரசை நிறுவ வேண்டும் என்பதே புரட்சிவாதிகளாகிய எமது விருப்பமாகும். அந்நிய ஏகாதிபத்தியத்திற்கு உங்கள் இறைமையை தாரைவார்க்காத, சுரண்டல் தன்மையற்ற இயக்கத்தை ஆதரித்து அணி திரள்வதன் மூலமே சிங்கள மக்கள் பொருளாதார சமத்துவமுள்ள ஒரு அரசையும், சமுதாயத்தையும் ஏற்படுத்த முடியும்.

தமிழீழ மக்களின் உரிமைகளை மதித்து, எமது போராட்டத்தின் நியாயத்தை உணர்ந்து எமது கோரிக்கைகளை ஆதரிக்கின்ற எந்த முதலாளித்துவ, விரோத ஏகாதிபத்திய விரோத சக்திக்கும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் பரிபூரண ஆதரவைத் தரும் என்றும் உறுதியளிக்கின்றோம்.

(6) சிங்கள இனவாத அரசிற்கு தாங்கிப் பிடிக்க முடியாமலும், வேறும் பல சூழ்நிலைமைகளின் நிமித்தம் வெளிநாடுகளில் தங்கி வாழும் தமிழீழ மக்களுக்கு, நீங்கள் தமிழீழ விடுதலைக்கு ஆற்றவேண்டிய பணி அளப்பெரியது என்பதை இச்சந்தர்பத்தில் அறிதல் வேண்டும். தாங்கள் தமிழீழ விடுதலைக்கு ஆற்றிவரும் உதவிகளை பெரிதும் மதிக்கிறோம். அதே சமயத்தில் தமிழீழ விடுதலைக்காக ஆயுதம் ஏந்திப் போராடும் புரட்சிகர அணிகளுக்கே உங்களது ஆதரவை தெரிவிக்க வேண்டும். தாங்கள் தங்கியிருக்கும் நாட்டில் பொழுதுபோக்கிற்காக தமிழீழ விடுதலையைப்பற்றி பேசுபவர்களையும், சந்தர்ப்ப வாதிகளையும் ஏகாதிபத்தியங்களின் எடுபிடிகளையும் இனம் கண்டு கொள்ளும்படி கேட்கின்றோம்

(7) உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் மக்களாகிய நீங்கள் வாழும் நாட்டில் சிறு பான்மையினராகவே இருக்கின்றீர்கள் நீங்கள் கடந்த யூலை கலவரத்தின் போது எண்ணிக்கையில் கூடியவர்கள் என்று மிதவாதத்தினால் சிங்கள இனவெறியர்கள் குறைந்த எண்ணிக்கையுடைய தமிழர்களை கொலை செய்ததைநினைவு கூறும் இவ்வேளையில் தமிழர்களுக்கு என உலகில் ஒரு நாடு இல்லாததே இதற்கு காரணம் என்பதையும்

படிப்பகம்

www.padippakam.com



நினைவூட்டுகிறோம். எனவே உலகத் தமிழர்களாகிய நீங்கள் ஒன்றுபட்டு எமது விடுதலை போராட்டத்துக்கு மேலும் உங்கள் உதவிகளையும், ஆதரவையும் தமிழீழ நாட்டை உருவாக்கும்வரை தொடர்ந்து வழங்குதல் வேண்டும்.

(8) இலங்கையில் நடைபெற்ற இனப்படுகொலைகளை அறிந்து அலைகடலுக்கு அப்பால் வாழும் தமிழ்நாட்டு மக்கள் உள்ளத்தாலும் உடலாலும் ஒன்றுபட்டவர்கள் என கிளர்ந்தெழுந்து, சிங்கள இனவாத ஸ்ரீலங்கா அரசிற்கு பெரும் எதிர்ப்பை உலகரீதியில் செய்தனர். உங்கள் தமிழ் நாட்டுக்கு அகதிகளாக அல்லல்ப்பட்டு வந்த தமிழர்களுக்கு அடைக்கலம் கொடுத்தும், எமது மக்கள் இடர்படும்போது எதிர்ப்புகளை தெரிவித்து தமது ஆன்மீக உறவை எங்களுடன் பிணைத்துக்கொண்டுள்ளீர்கள். இன்றைய சந்தர்ப்பத்தில் எம்முடன் துக்க நினைவஞ்சலியை செலுத்திக் கொண்டு இருக்கும் உங்களுக்கும் தமிழீழ மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டும் என்று திடசங்கர்ப்பம் பூண்டுள்ள தமிழ் நாடு அரசாங்கத்திற்கும், அனைத்து தமிழ்நாட்டு அரசியல் கட்சிகளும், கட்சித் தலைவர்களுக்கும், ஏனைய மக்கள் அமைப்புகளுக்கும் தமிழீழத்தை தவிர்ந்த எந்த ஒரு தீர்வும் தமிழீழ மக்களால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது எனத் தெளிவுபடுத்துகின்றோம்.

(9) பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்கள் ஆகிய நீங்கள் ஸ்ரீலங்கா அரச பயங்கரவாதத்தை உலகுக்கு எடுத்துக் காட்டியுள்ளீர்கள். தொடர்ந்தும்-அடக்குமுறைகளுக்கு உட்பட்டுவரும் தமிழ் மக்களின் பிரச்சினைகளை உலகுக்கு எடுத்துகாட்ட வேண்டிய மனிதாபிமான கடமை உங்களுக்கு உண்டு. தற்பொழுது பத்திரிகை தணிக்கை அரசாங்கத்தால் அமுல்படுத்தப்பட்டு வருவதனால், நமது மக்களின் மேல் தொடர்ந்து நடைபெற்றுவரும் இராணுவ ஆக்கிரமிப்புகள் வெளி உலகுக்கு தெரியாமல் மூழ்கடிக்கப் படுகின்

படிப்பகம்

www.padippakam.com



றன. ஆகவே, இவ் அரசாங்க அராஜக நடவடிக்கைகள் தமிழ் பேசும் மக்களிற்கும், உலகிற்கும் எடுத்துக்காட்ட வேண்டிய தலையாய கடமை உங்களிற்கு உண்டு.

இவ்வாறன் நியாயமான தமிழீழ விடுதலைபோராட்டத்திற்கு எமது தமிழ் பேசும் நல்லுக்கமும், மனிதாபிமான ஜனநயாக, சோஸலிச சக்திகள் அனைத்தும் தமது ஆதரவைத் தரவேண்டும் என தாங்கொண கொடுமைக்குட்பட்ட இந்த யூலை படுகொலை ஒராண்டு நினைவின் போது கேட்டுக்கொள்கிறேம்.

—வாழ்க தமிழீழம்

——X——

படிப்பகம்

www.padippakam.com

PEOPLES LIBERATION ORGANIZATION THAMILEELAM

DEMOLISH ALL REPRESSION

**P.L.O.T**

எங்கள் மக்களே எம்மைப் புரட்சியாளர்களாக ஆக்கியுள்ளார்கள். தமிழீழ மக்களது முழுமையான விடுதலையே எங்கள் நிலையாய நோக்கமாகும். பரந்துபட்ட தமிழீழ மக்களின் ஆயுதம் ஏந்திய புரட்சிகரப் போராட்டத்தின் மூலமே தமிழீழ விடுதலையை அடைய முடியும். ஒன்று திரண்ட மக்கள் ஆதரவுடன் விரைவில் தமிழீழத்தை வென்றெடுப்போம்

**உமாமகேசுவரன் (முகுந்தன்)**

வெளியீடு: செய்தி தொடர்புப் பிரிவு
தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்.

படிப்பகம்